ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 460) Jan (2) / 2026

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு


1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..........................................................3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)........................................25

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 425)

6-10-2 கூறாய் நீறு ஆய் நிலன் ஆகிக் கொடு வல் அசுரர் குலம் எல்லாம்
சீறா எரியும் திரு நேமி வலவா தெய்வக் கோமானே
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும் திருவேங்கடத்தானே
ஆறா அன்பில் அடியேன் உன் அடி சேர் வண்ணம் அருளாயே

**பொருள்** – க்ரூரராகவும் வலிமை நிறைந்தவராகவும் உள்ள அஸுரர்களுடைய கூட்டம் அனைத்தையும் பல துண்டுகளாகவும் துகள்களாகவும் வீழ்த்திய பின்னரும் சீறியபடியும் ஜ்வலித்தபடியும் உள்ள வெற்றி லக்ஷ்மியைக் கொண்ட சக்கரத்தாழ்வானை அடங்கியாளும் சக்தி கொண்டவனே! இப்படியாக அடியார்களுடைய விரோதிகளை அழிப்பதன் மூலம் நித்யஸூரிகளுக்குத் தலைவனாக உள்ளவனே! தாமரையானது நீரில் பிறப்பதற்குக் காரணமாக உள்ள சேற்றால் பூர்ணமாக உள்ள சுனைகளில் தாமரையானது சிவந்த அக்னி போன்று நிறம் கொண்டதாக மலரும்படி உள்ள திருவேங்கட திருமலையில் எப்போதும் உள்ளவனே! எப்போதும் அளவிட இயலாத ப்ரேமத்தைக் கொண்டுள்ள நீ க்ருபை செய்தருளவேண்டும்.

**அவதாரிகை** – "கூடக் கடவீர்; அதுக்கு ஒரு குறையில்லை; ஆனாலும், ப்ரதிபந்தகங்கள் கனத்திரா நின்றதே" என்ன; "உன் கையில் திருவாழியிருக்க, நீ இங்ஙனே சொல்லலாமோ?" என்கிறார்.

**விளக்கம்** – கடந்த பாசுரத்தில் ஆழ்வாருடைய சொற்களைக் கேட்ட திருவேங்கடமுடையான் ஆழ்வாரிடம், "நீவிர் நம்முடன் வந்து சேர்வீர். அதற்கு எந்த ஒரு குறையும் இல்லை. ஆனால் நீவிர் நம்மை அடைவதைத் தடுக்கும் தடைகள் வலிமையாக உள்ளனவே", என்றான். இதற்கு ஆழ்வார், "உனது திருக்கரத்தில் சக்கரத்தாழ்வான் உள்ளபோது நீ இவ்விதம் கூறலாமா?", என்கிறார்.

**வ்யாக்யானம்** - (கூறாய் இத்யாதி) நீ "கை கழலா நேமியானா"யிருக்கிறதுக்கும் என் ப்ரதிபந்தகம் கிடக்கைக்கும் என்ன சேர்த்தியுண்டு? அப்ரதிஹதமான சக்தியையுடைத்தான திவ்யாயுதங்களானவை இவனுடைய ஸகல பாபங்களையும் போக்கி உத்தரிப்பிக்கக் கடவதாயிருக்கும்: அவனாலே வருமவையும் பரிஹரிக்க வற்றாயிருக்கும். "ரக்ஷந்தி ஸகலாபத்ப்ய:" இறே; "ஸகல" சப்தத்துக்குள்ளே இவனுமுண்டே. இனித்தான், பாபங்கள் "ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி" என்கிறபடியே இவன்பக்கல் தோஷங்கண்ட அவன் நிக்ரஹத்தாலே வருமவையிறே; அங்ஙனே வருமவையும் பரிஹரிக்கக் கடவதாயிருக்கும் இவை.

**விளக்கம்** – (கூறாய் இத்யாதி) - நேமி என்றால் சக்கரம். நீ, நான்முகன் திருவந்தாதி (87) - "கை கழலா நேமியான்" என்பவனாக உள்ளதற்கும், எனது தடைகள் நீடிப்பதற்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதோ? அவை தானாகவே போகும். தடையில்லாத சக்தி கொண்ட இவனுடைய திவ்ய ஆயுதங்கள், ஒருவனுடைய அனைத்து பாபங்களையும் நீங்கி, அவனைக் காப்பாற்றவல்லதாகவே உள்ளன. ஆனால் திவ்யமான ஆயுதங்கள், வெறும் அலங்காரமாக இன்றி, விரோதிகளை அழித்துக் காப்பாற்றுமோ என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; "ரக்ஷந்தி ஸகலாபத்ப்ய: - அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றுகின்றன" என்பது காண்க. மற்றவர்களால் வரும் ஆபத்து மட்டும் அல்லாமல், ஸர்வேச்வரன் மூலம் வரும் ஆபத்துக்களிலிருந்தும் காக்கும் என்றார். "ஸகல" என்பது "அனைத்தும்" என்பதாக உள்ளபோது, இவனும் அதில் உள்ளான் அல்லவோ? ஆனால் அனைத்து பிராணிகளுக்கும் நன்மையை மட்டுமே செய்யும் அவன், ஆபத்தை உண்டாக்குவானோ என்பதற்கு விடை தருகிறார்; பாபங்களானவை, கீதை (16-19) – ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி - பாபம் செய்தவர்களை நான் ஸம்ஸாரத்தில் தள்ளுகிறேன் - என்பதற்கு ஏற்ப, ஒருவனிடம் குற்றங்களைக் கண்ட அவனுடைய

"தண்டித்தல்" என்பதால் ஏற்படுபவை அல்லவோ? அவ்விதம் வரும் பாபங்களையும் இந்த திவ்ய ஆயுதங்கள் விலக்கும் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - அதுக்கு அடி, அவன் அடியில் பண்ணின அநுக்ரஹத்தையே நினைத்திருக்கையாலே. இனித்தான், "இவற்றின் தோஷங் கண்டு நாம் ஔபாதிகமாகச் சீறினபோதும் நீங்கள் கைவிடாதே, நாம் அடியிற் பண்ணின ஸ்வாபாவிகமான நம்முடைய ப்ரஸாதத்தைப் பார்த்து நீங்கள் ரக்ஷியுங்கோள்" என்று அவன் பக்கலிலே பெற்றுடையராயிருப்பர்களிறே. "அருளார் திருச்சக்கர"மிறே. பண்டே அவனைக் கைகண்டிருக்குமிறே. அவன் அருள் மறுத்தபோதும் இங்குத்தை அருள் மாறாதேயிறே யிருப்பது. ஆகையாலே, அவன் ப்ரஸாதம் பெற்றவர்கள் திருவாழியில் கூர்மையையிறே தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் மூலமாக ஏற்படும் ஆபத்தையும் இவை விலக்குவதற்கு அடிப்படை என்ன என்பதைக் கூறுகிறார்; அவன் சேதநர்களிடம் காண்பிக்கும் இயல்பான க்ருபையை இந்த ஆயுதங்கள் நினைத்தபடி உள்ளதால் ஆகும். அதாவது ஸர்வேச்வரன் இந்த திவ்ய ஆயுதங்களிடம், "நாம் இவர்களுடைய குற்றங்களைக் கண்டு, இயல்பாக நம்மிடம் இல்லாமல், நம்மிடம் வந்து சேர்ந்த தன்மையான கோபம் கொண்டு, இவர்கள் மீது சீறினாலும், நிங்கள் இவர்களைக் கைவிடக் கூடாது. நாம் இவர்களுக்கு முன்பு செய்த நம்முடைய இயல்பான க்ருபையை நீங்கள் நினைவில் கொண்டு இவர்களை நீங்கள் காப்பாற்றவேண்டும்", என்று கூறுகிறான்; ஆகவே இவை அவனுடைய திருவுள்ளத்தை அறிந்தவையாகவே இருக்கும். ஆனால் அவன் சீறியபோதிலும், இவை காப்பாற்றும்படியாக, இவற்றுக்கு அவனைக் காட்டிலும் க்ருபை அதிகமாக இருக்குமோ என்றால், திருவிருத்தம் (33) - அருளார் திருச்சக்கரம் - என்பது காண்க. அவன் இவர்கள் விஷயத்தில் செய்தருளும் கிருபையை இவை அறிந்தது எப்படி என்பதைக் கூறுகிறார்; முன்பிலிருந்தே அவனுடைய திருக்கரங்களில் உள்ளவைகள் அல்லவோ? அவன் தனது க்ருபையை மறுக்கும்போதிலும், இவை தங்களுடைய க்ருபையை மறுப்பதில்லை. ஆகவே அவனுடைய க்ருபையைப் பெற்றவர்கள், சக்கரத்தாழ்வானுடைய கூர்மையை அல்லவோ தங்களுக்குத் தஞ்சமாக எண்ணியபடி உள்ளனர்?

**வ்யாக்யானம் -** (கூறாய் நீறாய் நிலனாகி) திருச்சரம்போலே “சிந்நம் பிந்நம்” என்கிற பரும்பணிக்கு விட்டுக் கொடாத திருவாழி. திருச்சரத்துக்கு ஒரு குண ஸ்பர்சமுண்டென்கிறார், இத்தைப் பற்ற. முற்பட, இரு துண்டமாக்கிப் பின்னை நீறாக்கிப் பின்னை அது காணவொண்ணாதபடி வெறுந்தறையாக்கும். (ஆகி) ஆக்கியென்னுதல், ஆம்படியென்னுதல். (கொடுவல்லசுரர்) சீறுகைக்கு ஹேது இருக்கிறபடி. க்ரூரமான செயல்களைச் செய்யக்கடவராய், ஒருவரால் வெல்லவொண்ணாதபடி வலியை யுடையரான அசுரர். (குலமெல்லாம்) ஒருவன் செய்த தப்பே ஜாதியாக முடிக்க வேண்டும்படி யிருக்கையாலே, ஒருவரையும் தப்பாமல் கோலி முடித்தபடி. அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற இவன் வளைவிலகப்படாதாரில்லை. “வளைவாய்த் திருச்சக்கரத் தெங்கள் வானவனார்” என்று அவன் வளைவிலே யகப்பட்டுப் பின்பிறே மேல்போயிற்று. “கூறாய் நீறாய் நிலனா”கைக்குப் பண்ணின வ்யாபாரமேதென்னில், (சீறாவெரியும்) இவை முடிந்து போகச் செய்தேயும் கொண்ட குதை மாறாதே, இரை பெறாப் பாம்பு போலே ஜ்வலியா நிற்கும். (திருநேமி வலவா) நீ வலவருகே திருவாழியைத் தரித்திருக்க, நான் க்லேசத்தை தரித்திருப்பதே!

**விளக்கம் –** (கூறாய் நீறாய் நிலனாகி) - அடுத்து “கூறாய், நீராய்” என்ற இரண்டு சொற்கள் மூலம், அம்புகளை நோக்கும்போது, அவற்றிலிருந்து இவற்றுக்கு வேறுபாடு உள்ளது என்கிறார்; அம்புகள் போன்று, “சிந்நம் பிந்நம்” என்பதான பரும்பணிக்கு விட்டுத்தராத சக்கரத்தாழ்வான். ஆனால் அம்புகளுக்கு மட்டும் பரும்பணி ஏற்படக் காரணம் என்ன என்பதைக் கூறுகிறார்; இந்தச் சக்கரத்தை நோக்கும்போது, அம்பிற்கு ஒரு குணத்தின் சேர்க்கை உள்ளது என்கிறார்; “குணம்” என்பது “வில்லின் நாண்” மற்றும் “க்ருபை” ஆகிய இரண்டையும் குறிப்பதாகும். சக்ரத்தாழ்வானுடைய வேறுபாட்டைக் கூறுகிறார்; முதலில் இரண்டு துண்டுகள் என்று செய்து, பின்னர் சாம்பல் என்றாக்கி, அதன் பின்னர் அதனையும் காண இயலாதபடி வெறும் தரை என்று ஆக்கிவிடும். (ஆகி) - ஆக்கி; அதாவது “செய்து” என்று பொருள். (கொடுவல்லசுரர்) - அஸுரர்களுடைய வலிமை மற்றும் க்ரூரமான தன்மை ஆகியவற்றை அருளிச்செய்ததன் பலன் கூறுகிறார்; அதாவது சக்கரத்தாழ்வான் சீறுவதற்கு ஒரு காரணம் உள்ளது என்று பொருள். கொடிய செயலைச் செய்தபடி உள்ளவர்களாக, யாராலும் தங்களிடமிருந்து தப்பிச் செல்ல இயலாதபடி வலிமை உள்ளவர்களாக இருக்கும் அஸுரர்கள். (குலம் எல்லாம்) - முழுமையாக குலத்தை அழிக்கும் காரணம் கூறுகிறார்; ஒருவன் செய்த தப்பு

காரணமாக அந்தக் குலமே முடிக்க வேண்டும்படி உள்ளதால், யாரையும் தப்ப விடாமல் சுற்றி வளைத்து முடித்த விதம். “திரு” என்று அழகைக் கூறுவதால் அநுகூலரும், “நேமி” என்பதால் ப்ரதிகூலரும் என்று எந்த வேறுபாடும் இன்றி, சக்கரத்தாழ்வான் விஷயத்தில் அகப்படாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் அநுகூலரும் சக்கரத்தாழ்வானுக்கு அகப்படுபவர்களோ என்பதைக் கூறுகிறார்; திருவிருத்தம் (70) - வளைவாய்த் திருச்சக்கரத்து எங்கள் வானவனார் - என்று அவன் வளைவில் அகப்பட்டு அதன் பின்பு அல்லவோ மேலே சென்றது? “கூறாய் நீராய் நிலன்” என்று ஆவதற்கு செய்த செய்கை என்ன என்பதற்கு “சீறா எரியும்” என்கிறார். (சீறா எரியும்) - இந்த விரோதிகள் அனைத்தும் முடிந்து போன பின்னரும், சக்கரமாகிய தான் கைக்கொண்ட உத்யோகமானது முடிந்துவிடாமல், இரை கிட்டப் பெறாத பாம்பு போன்று, ஜ்வலித்தபடியே இருக்கும். (திருநேமி வலவா) - நீ உனது வலது திருக்கரத்தில் இப்படிப்பட்ட சக்கரத்தாழ்வானைக் கொண்டுள்ளபோது, நான் துக்கத்தை ஏன் தரித்தபடி உள்ளேன்?

**வ்யாக்யானம்** - (தெய்வக்கோமானே) இப்படி ஆச்ரிதர்க்காக வந்து படுகிறவன் ஆளில்லாதவனல்லகிடீர்! “அயர்வறுமமரர்களதிபதி” கிடீர். அங்குக் கையுந் திருவாழியுமான அழகையநுபவிப்பாரேயிறே யுள்ளது; இரு துண்டமாக விடுகைக்கு ஆளுள்ளது இங்கேயிறே. இரண்டு விபூதியையும் ஆளுவது திருவாழியாலே காணும்! “அகல் விசும்பும் நிலனுமிருளார் வினை கெடச் செங்கோல் நடாவுதிர்” என்கிறபடியே, அழகாலே அங்குள்ளாரையாளும், கூர்மையாலே யிங்குள்ளாரையாளும். அங்குக் கூர்மை குமரிருக்கும், இங்கு அழகு குமரிருக்கும். அங்குள்ளார்க்குக் கைமேலே ஜீவநமாயிருக்கும், இங்குள்ளார்க்கு விரோதியைப் போக்கிப் பின்னையாயிற்று ஜீவநமிடுவது. அங்குள்ளார் அவன் கையே பார்த்திருக்கையாலே, இவர்களுக்கு அதில்லையே.

**விளக்கம்** – (தெய்வக் கோமானே) - இவ்விதம் அடியார்களுக்காகப் படாதபாடு பட்டபடி உள்ள அவன், தன் உடன் வேறு யாரும் இல்லாதவன் அல்லன். திருவாய்மொழி (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி - ஆவான். பரமபதத்தில் இவன் திருக்கரமும் சக்கரமும் என்று நிற்கின்ற நிலையை மட்டுமே அனுபவிப்பவர்கள் உள்ளனர். ஆனால் அங்கு விரோதிகள் யாரும் இல்லையா என்பதற்கு விடை அளிக்கிறார்; இரண்டு துண்டுகள் என்று செய்யும்படி உள்ளவர்கள் இங்கு அல்லவோ உள்ளனர்; இரண்டு விபூதிகளையும் இவன்

ஆள்வது சக்கரத்தாழ்வானைக் கொண்டே ஆகும்; இதற்கு ப்ரமாணம் திருவிருத்தம் (33) - அகல் விசும்பும் நிலனுமிருளார் வினை கெடச் செங்கோல் நடாவுதிர் – என்பதாகும். இப்படி சக்கரத்தாழ்வான் ஆள்கின்ற விதங்களைக் கூறுகிறார்; அங்குள்ளவர்களைத் தனது அழகால் ஆள்கிறான்; இங்குள்ளவர்களைத் தனது கூர்மையால் ஆள்கிறான். அங்கு கூர்மை பின்னே இருக்கும்; இங்கு அழகு பின்னே இருக்கும். இந்த இரண்டிற்கும் காரணம் என்ன என்பதைக் கூறுகிறார்; அங்கு உள்ளவர்கள் இவன் அழகை மட்டுமே நோக்கித் தரிப்பதால், திருக்கரம் மீதே அவர்கள் ஜீவனம் இருக்கும்; இங்கு உள்ளவர்களுக்கு, விரோதிகளை நீக்கிய பின்னர் அல்லவோ வாழ்க்கையை அமைக்கிறான்? அங்குள்ளவர்கள் தங்கள் முயற்சியை விடுத்து இவன் திருக்கரத்தையே நோக்கியபடி உள்ளதால், அவ்விதம் அங்கு உள்ளது; இங்குள்ளவர்கள் அவ்விதமாக இருப்பதில்லை அல்லவோ?

**வ்யாக்யானம்** - என்? நாம் இப்போது அஸந்நிஹிதரன்றோ என்னில்; (சேறார் சுனையித்யாதி) சேறுகளார்ந்திருந்துள்ள சுனைகளிலே தாமரைகளானவை செந்தீ போலே மலராநிற்கும். எண்ணெயாலே எரியும் விளக்கொழிய, நீராலே எரியும் விளக்குக் கண்டு அநுபவிக்கக்காணும் இவர் ஆசைப்படுகிறது. நீரிலே நெருப்பெழுந்தாற் போலேயிறே யிருக்கிறது! (ஆறா அன்பிலடியேன்) இவர்க்கு நிரூபகம் இருக்கிறபடி. சுனைகளில் நீர் வற்றிலாயிற்று இவருடைய அன்பு வற்றுவது. "மயர்வற மதிநலமருள" அது அடியாக வந்த அன்பிறே. ஊற்றுடைத்தே. க்ரம ப்ராப்தி பற்றாதபடியான ப்ரேமமிறே. (உன்னடி சேர் வண்ணமருளாயே) உன் திருவடிகளிலே சேர்ந்து அடிமை செய்யும்படி என் பக்கலிலே க்ருபை பண்ணியருளவேணும். நீ திருமலையிலே நிற்கிற நிலைக்கு ப்ரயோஜநம் பெறப் பாராய்! என் அன்புக்கு இரையிடப் பாராய்!!

**விளக்கம்** – இதனைக் கேட்ட திருவேங்கடமுடையான ஆழ்வாரிடம், "நாம் இப்போது அருகாமையில் இல்லாதவன் அல்லவன் அல்லவோ?", என்றான். இதற்கு ஆழ்வார் விடை கூறுகிறார். (சேறார் சுனை இத்யாதி) - சேறு நிறைந்துள்ள சுனைகளில் தாமரைமலர்கள் சிவந்த நிறம் பொருந்திய நெருப்பு போன்றே மலர்ந்தபடி உள்ளன. எண்ணெய் கொண்டு எரிகின்ற உண்மையாக தகிக்கின்ற அக்னியைக் காட்டிலும், நீரில் எரிகின்ற குளிர்ந்த இந்த விளக்கைக் காணவே இவர் விரும்புகிறார். நீரில் நெருப்பு எழுந்தது போன்று இந்தத் தாமரைகள் உள்ளன. (ஆறா அன்பிலடியேன்) - இவரை அடையாளம் காண்பிக்கவல்லதாக உள்ளது எது? சுனைகளில் நீர் வற்றினால் மட்டுமே இவர் அவன் மீது கொண்ட

அன்பு வற்றும். இவ்விதம் அன்பு வற்றாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்றால், திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் - என்று அவன் அருள, அதன் அடிப்படையில் வந்த அன்பு என்பதால் ஆகும். “சுனை” என்பதுடன் சேர்ந்து இவரது அன்பைக் கூறுகிறார். சுனை வற்றாதோ என்றால், ஊற்றுடைய சுனை என்பதால் வற்றாது. “ஆறா அன்பு” என்று அருளிச் செய்ததற்கு “நித்யமான அன்பு” என்று கூறிய பின்னர், “மெய்யமர் காதல்” என்பதற்கு ஏற்ப, அவனை அனுபவித்தால் அல்லாமல் ஆறாத அன்பு என்பதாக வேறு ஒரு பொருளையும் “க்ரம” என்று தொடங்கி அருளிச்செய்கிறார்; சரியான வரிசையில் தகுந்த நேரத்தில் அடைதல் என்பதைப் பொறுக்க இயலாத ப்ரேமம் அல்லவோ? (உன்னடி சேர் வண்ணமருளாயே) - உன் திருடிகளில் நான் சேர்ந்து அடிமை செய்யும்படியாக எனக்கு நீ க்ருபை செய்தருளவேண்டும். நீ திருவேங்கடமலையில் வந்து நிற்பதற்கான ப்ரயோஜனத்தை அடைவதற்கு முயல்வாயாக! எனது அன்பிற்குத் தகுந்த இரையை இட முயல்வாயாக!

6-10-3. வண்ணம் மருள் கொள் அணி மேக வண்ணா மாய அம்மானே
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே இமையோர் அதிபதியே
தெள் நல் அருவி மணி பொன் முத்து அலைக்கும் திருவேங்கடத்தானே
அண்ணலே உன் அடி சேர அடியேற்கு ஆ ஆ என்னாயே

**பொருள்** – காண்பவர்கள் மனதில் பிச்சு ஏறும்படியாக அழகைக் கொண்ட, மேகம் போன்ற வடிவு கொண்டவனே! வியக்க வைக்கும் குணங்களால் அனைத்தையும் நிர்வாகம் செய்பவனே! உண்ண வேண்டாதபடியாக நேரடியாக மனதில் புகுந்து ரசிக்கும்படியாக உள்ள அமிர்தமே! இப்படிப்பட்ட பலவற்றையும் நித்யஸூரிகள் அனுபவிக்கும்படியாகச் செய்யும் மேன்மையானவனே! தெளிவானதும் காண்பதற்கு இனிமையானதும் என்றுள்ள அருவிகள் மணிகளையும், பொன்னையும், முத்தையும் கொண்டு கொழித்தபடி உள்ள திருவேங்கடமலையில் அருகில் நிற்பவனே! உனக்கே உரிய எஜமானத் தன்மையை வெளிப்படுத்தியபடி நிற்பவனே! அடையவேண்டிய உனது திருவடிகளை, உனது அடிமைகளாகிய நாங்கள் வந்து அடையும்படியாக “ஐயோ ஐயோ” என்று இரக்கம் கொண்டு அருளவேண்டும்.

**அவதாரிகை** –“ ‘அருளாய்’ என்றீர்; இங்ஙனே நினைத்தபோதாக அருளப்போமோ?” என்ன; “வ்யதிரிக்த விஷயங்களில் போகாதபடியான ஜ்ஞாந லாபத்தைப் பண்ணித் தந்த உனக்கு, ப்ராப்தி பண்ணித் தருகை பெரியபணியோ?” என்கிறார். என்னால் வந்த குறையறுத்த உனக்கு, உன்னால் வரும் குறையறுக்கை பெரிய பணியோ?

**விளக்கம்** – ஆழ்வாரிடம் ஸர்வேச்வரன், “என்னிடம் வந்து ‘எனக்கு அருள்வாயாக’ என்று கேட்கிறீர். இவ்விதம் நீவிர் நினைக்கும்போது நான் செய்ய முடியுமோ?”, என்றான். இதற்கு ஆழ்வார், “உன்னைத் தவிர மற்ற விஷயங்களில் எனது மனம் செல்லாதபடியாக எனக்கு ஞானத்தை அருளிச்செய்த உனக்கு, பெற்றை அளிப்பது மிகவும் பெறிய செயலா?”, என்கிறார். அதாவது, என்னால் எனக்கு ஏற்பட்டிருந்த குறைகளை நீக்கிய உனக்கு, உன்னால் வரும் குறையை நீக்குவது பெரிய செயலா என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (வண்ணம் இத்யாதி) வண்ணமானது ப்ரகாரமானது, அருள் கொண்டிருப்பதாய், தர்சநீயமான மேகம் போன்ற வடிவையுடையவனே! அன்றிக்கே, வண்ணமானது வடிவானது, கண்டார் நெஞ்சை இருளப் பண்ணக் கடவதாயிருக்கை என்றுமாம்; “மைப்படி மேனி”யிறே. அங்ஙனுமன்றிக்கே மேகத்தினுடைய அகவாய் கல்லென்னும்படியாயிற்றுத் திருமேனியிலுண்டான ப்ரஸாதாதிசயம் இருக்கிறபடி.

**விளக்கம்** – (வண்ணம் இத்யாதி) - “வண்மை அருள்கொள் மணிவண்ணா” என்பதற்கு மூன்றுவிதமாகப் பொருள் கூறுகிறார். முதல் பொருளில் “வண்மை” என்பது இயல்பு என்பதாகக் கொள்கிறார். அதாவது, “க்ருபையுடன் கூடிய இயல்பு கொண்டவனாக, காண்பதற்கு இனிமையான மேகம் போன்று வடிவம் கொண்டவனே” என்பதாகக் பொருள்; அதாவது அருள் கொண்டிருப்பதாக, காண்பதற்கு இனிய மேகம் போன்ற வடிவம் கொண்டவனே! அதாவது “அருள் கொள் வண்ணம்” என்பதை மேகத்திற்கு அடைமொழியாகக் கொண்டார். அல்லது “அருளுடன் கூடிய இயல்பு கொண்டவன்” என்று இவனுக்கு அடைமொழியாகக் கொள்ளுதல்; இதில் “வண்ணம்” என்பது “வடிவம்” என்று பொருள். அதாவது வடிவானது காண்பவர்கள் நெஞ்சத்தில் தடுமாற்றத்தை ஏற்படுத்துவதாக,

காண்பதற்கு இனிய மேகம் போன்ற வடிவு கொண்டவனே! இரண்டாவது பொருளுக்கான ப்ரமாணம் திருவிருத்தம் (94) – மைப்படி மேனி - என்பதாகும். அடுத்து மூன்றாவதாக ஒரு பொருள் கூறுகிறார்; அதில் “அருள் கொள் வண்ணம்” என்பது அவனுடைய திருமேனிக்கு அடைமொழியாகிறது; அதாவது மேகத்தின் உட்புறம் கடினமாக உள்ளது என்று கூறலாம்படி, திருமேனியில் க்ருபை மிகுதியாக உள்ளது.

**வ்யாக்யானம்** - (மாயவம்மானே) வெறும் வடிவழகே யன்றிக்கே, ஆச்சர்யமான குண சேஷ்டிதங்களால் பெரியனானவனே! (எண்ணம் புகுந்து தித்திக்குமமுதே) விலக்ஷண ஜந்மத்தே பிறந்து ஒரு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணி அத்தாலே பெற்று புஜிக்கும்போது இனிதாகையன்றிக்கே, இன்னார்க்கு என்றன்றிக்கே மநோரத மாத்ரத்திலே தானே வந்து புகுந்து போக்யமாகை. “உள்ளுந்தோறுந் தித்தி”க்கும் அமுதிறே!

**விளக்கம்** – (மாய அம்மானே) - வெறும் வடிவழகால் மட்டும் அல்லாமல், வியக்க வைக்கும் குணங்கள் மற்றும் செயல்களால் உயர்ந்தவனே! (எண்ணம் புகுந்து தித்திக்குமமுதே) - “எண்ணம்” என்பது “நினைத்த அளவில்” என்பதாகும்; “எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுது” என்பதன் மூலம், தேவர்களுடைய அமிர்தத்திலிருந்து வேறுபடுத்துகிறார்; தெய்வப்பிறவியில் பிறந்து, ஒரு உபாயத்தைக் கைக்கொண்டு, அதன் மூலம் அமிர்தம் அடைந்து, அதனை உண்ணும்போது இனிமையாக உள்ள அமிர்தம் போன்று அல்லாமல், ஒரு குறிப்பிட்டவர் என்பது இல்லாமல், நினைத்த நேரத்திலேயே தானே வந்து உள்ளே புகுந்து இனிமையாகச் செய்தல். நினைத்த நேரத்திலேயே இன்பமாக இருக்குமோ என்பதற்கு ப்ரமாணம் திருவாய்மொழி (8-6-3) - உள்ளும் தோறும் தித்திப்பான் – என்பதாகும்; அப்படிப்பட்ட அமிர்தம் அல்லவோ?

**வ்யாக்யானம்** - (இமையோரதிபதியே) மது வ்ரதம் போலே இவ்வம்ருதமே ஜீவநமாக இருக்குமவர்கள். (தெண்ணலருவியித்யாதி) தெளிந்து நன்றான அருவிகளானவை, விலக்ஷணமான மாணிக்கங்களையும் பொன்களையும் முத்துக்களையும் கொழித்து எறட்டுகிற திருமலையிலே நின்றருளுகிற ஸர்வேச்வரனே! (அண்ணலே) திருமலையிலே வந்து நின்று எனக்கு உன் சேஷித்வத்தை உதறிப்படுத்தவனே! “இமையோர் அதிபதியா யிருந்து வைத்து வண்ணமருள்கொளணி மேகவண்ணனாய் மாயவம்மானாய்த் தெண்ணலருவி

மணி பொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானாய் அண்ணலாய்க் கொண்டு எண்ணம் புகுந்து தித்திக்குமமுதே" என்கிறார். (உன்னடி சேரவடியேற்காவா வென்னாயே) கிட்டி நின்று முறையை யறிவித்த நீ, ப்ராப்தியையும் பண்ணித் தாராய்! உன் திருவடிகளை ப்ராபிக்கும்படி, அநந்யகதியான எனக்கு "ஐயோ! ஐயோ!" என்று தயையைப் பண்ணாய்! உன்னடியன்றோ? ப்ராபகமுமாய் ப்ராப்யமுமாய் போக்யமுமான திருவடிகளைச் சேரும்படி க்ருபை பண்ணியருளாய்!

**விளக்கம்** – (இமையோர் அதிபதியே) - மது அமிர்தம் போன்று இந்த அமிர்தத்தையே தங்களுடைய ஜீவனாகக் கொண்டு இருப்பார்கள். (தெள் நல் அருவி இத்யாதி) – "நல்" என்பதை "மாணிக்கம்" போன்றவற்றுக்கும் சேர்க்கவேண்டும்; தெளிந்து நன்றாக உள்ள அருவிகளானவை, மேன்மையான மாணிக்கங்களையும் பொன்னையும் முத்துக்களையும் கொழித்து, அனைத்து இடங்களிலும் பரப்பியபடி உள்ள திருவேங்கடமலையில் நின்று அருளும் ஸர்வேச்வரனே! (அண்ணலே) - திருவேங்கடத் திருமலையில் வந்து நின்று உனது எஜமானத்தன்மையை எனக்கு உறுதியாக்கியவனே! "இமையோர் அதிபதியாய் இருந்து வைத்து வண்ணமருள்கொள் அணி மேகவண்ணனாய் மாய அம்மானாய்த் தெள் நல் அருவி மணி பொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானாய் அண்ணலாய்க் கொண்டு எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே" என்று வரிசைப்படுத்துகிறார். (உன்னடி சேரவடியேற்காவா வென்னாயே) - அருகில் வந்து நின்று, உன்னை அடையும் முறையை அறிவித்த நீ, பேற்றையும் தருவாயோ! உனது திருவடிகளை அடையும்படியாக, வேறு கதி ஏதும் இல்லாத எனக்கு, "ஐயோ ஐயோ" என்று க்ருபை செய்தருளவேண்டும். உபாயமும், உபேயமும், இன்பமும் என்றுள்ளது உனது திருவடிகள் அல்லவோ? ஆகவே அவற்றைச் சேரும்படியாக நீ க்ருபை செய்தருளவேண்டும்.

6-10-4 ஆவா என்னாது உலகத்தை அலைக்கும் அசுரர் வாழ் நாள் மேல்
தீ வாய் வாளி மழை பொழிந்த சிலையா திரு மா மகள் கேள்வா
தேவா சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
பூ ஆர் கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே

**பொருள்** - இந்த லோகத்தைக் கண்டு "ஐயோ ஐயோ" என்று இரக்கம் கொள்ளாமல், அனைவரையும் வருத்துகின்ற அஸுரப் பிறவிகளுடைய உயிர் மீது, நெருப்பு நுனிகளைக் கொண்டதான அம்புகளை மழை போன்று சொரிந்தபடி

உள்ள ஸ்ரீசார்ங்கம் என்ற வில்லைக் கொண்டவனே! அந்த "விரோதிகளை அழித்தல்" என்ற செயலால் மகிழ்ந்து, வீர பத்னியாக உள்ள மஹாலக்ஷ்மிக்கு ஏற்ற ரூபம் கொண்டவனே! அதன் விளைவாக ஒளிர்ந்தபடி உள்ளவனே! இந்த விரோதிகளை அழித்தல் என்பதையே காரணமாகக் கொண்டு தேவர்களும், ரிஷிகளும் கூட்டம் கூட்டமாக வந்து ஆதரிக்கும்படியாக திருவேங்கடமலையில் வாழ்பவனே! அவர்கள் இட்ட மலர்கள் கொண்டு நிறைந்த திருவடிகளை, அவற்றை அனுபவிக்க வேண்டிய தகுதி உள்ளபோதிலும் இழந்து நிற்கும்படியான பாபங்கள் கொண்ட நான், அவற்றைக் கிட்டும் விதத்தை நீயே எனக்குக் கற்பிக்கவேண்டும்.

**அவதாரிகை -** உன்னை ப்ராபிக்கைக்கு உறுப்பாக நீ கண்டு வைத்த ஸாதநங்கள் எனக்கு ஒன்றும் உடலாகிறனவில்லை; ஆன பின்பு, தேவரை நான் ப்ராபிக்கைக்கு எனக்கென்னத் தனியே ஒரு ஸாதநங் கண்டு தரவேணுமென்கிறார்.

**விளக்கம் –** "உன்னை அடைவதற்கு ஏற்றபடி நீ செய்து வைத்த உபாயங்கள் ஏதும் எனக்குக் கைக்கொள்வதாக இல்லை. ஆகவே உன்னை நான் அடைவதற்கு எனக்காக ஒரு தனியான உபாயத்தைச் செய்து தரவேண்டும்", என்கிறார்; "தனியே ஒரு ஸாதநம் கண்டு தர வேணும்" என்பதன் கருத்து என்ன என்பதை அரும்பதம் விளக்குகிறது. "நான் செய்த பாபங்களுக்கு நீ உண்டாக்கியுள்ள நரகங்கள் போதாது. எனக்கு ஒரு நரகம் வேண்டும் என்றால், அதனை உண்டாக்கித் தரவேண்டும் என்பதே ப்ரார்த்தனை" என்பது அல்ல; மிகுந்த தாராளகுணமும் சக்தியும் கொண்ட நீ, அந்தப் பாபங்களைப் போக்கித் தரவேண்டும் என்பதே கருத்தாகும் அல்லவோ? அதனைப் போன்று எப்போதும் தயாராக உள்ள நீயே காக்கவேண்டும் என்று கருத்து. "ஒன்றும் உடலாகிறனவில்லை" என்றால், கர்ம ஞான பக்தி யோகங்கள் போன்று, ஸித்தோபாயமும் ஸாதனம் அன்று என்பது தோன்றினாலும், ஸித்தோபாயமாக நீயே விரைந்து செய்யவேண்டும் என்பதே கருத்து.

**அவதாரிகை -** நம்பிள்ளை சீயரை ஒருநாள் " 'பஞ்சமோபாயமென்று கொண்டு ஒன்றுண்டு' என்று சொல்லாநின்றார்கள்; நாட்டிலேயும் அங்ஙனேயிருப்பதொன்று உண்டோ?" என்று கேட்டருள; "நான் அறிகிறிலேன்; இனி சதுர்த்தோபாயந்தான்

பகவானேயாயிருக்க, வ்யோமாதீதஞ் சொல்லுவாரைப் போலே 'அவனுக்கும் அவ்வருகே யொன்றுண்டு' என்கையிறே, அது நான் கேட்டறியேன்" என்றருளிச்செய்தார். "ஆனால், 'ஆவா' என்கிற பாட்டு அருளிச்செய்யும்போது 'எனக்குத் தனியே ஒரு ஸாதநங் கண்டு தரவேணுமென்கிறார்' என்று அருளிச்செய்கையா யிருக்குமே" என்ன; "அதுவோ! அது உன் ப்ரதிபத்தியில் குற்றங் காண்; அதுக்கு இங்ஙனே காண் பொருள்; நீயும் உளையாயிருக்க நான் இங்ஙனே யிழப்பதே யென்கிறார் காண்" என்று அருளிச்செய்தார். "ஸாஹம் கேச க்ரஹம் ப்ராப்தா த்வயி ஜீவத்யபி ப்ரபோ"; நீயும் உளையாயிருக்க, என் மயிரைப் பிடித்துச் சிலர் நலியும்படி நான் பரிபூதையாவதே! உன் ஸத்தைக்கும் என் பரிபவத்துக்கும் என்ன சேர்த்தியுண்டு? (ப்ரபோ) நீயும் என்னோடொக்க ஸ்த்ரீயானாயாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே; நீ பரிப்ருடனா யிருக்கச் செய்தே நான் நோவுபடுவதே!

**விளக்கம்** – இந்த விஷயத்தில் நான்காவது ஸாதனமான ஸித்தோபாயமாக உள்ள ஸர்வேச்வரன் அல்லாமல் வேறு உபாயம் இல்லை என்பதற்கு ஒரு நிகழ்வைக் கூறுகிறார்; நஞ்சீயரிடம் நம்பிள்ளை ஒருநாள், "பஞ்சமோபாயம் என்று ஒன்று உள்ளது கூறுகிறார்கள். இங்கு அது போன்ற ஒன்று உள்ளதோ?", என்கிறார். இதற்கு நஞ்சீயர், "நான் அறியவில்லை. இனி நான்காவது உபாயம் என்பதே பகவானே ஆவான் என்றுள்ளபோது, 'ஆகாயம் என்று கூறப்படும் நாராயணனுக்கும் அப்பால் ஒன்று உள்ளது' என்பது போன்றும், 'நாராயணனுக்கு அந்தர்யாமியாக ருத்ரன் உள்ளான்' என்று கூறும் பாசுபதர் போன்றும், 'நாராயணனைப் போன்று வேறு ஒரு நான்காவது உபாயம் உள்ளது" என்பதை நான் அறியேன்", என்றார். அடுத்து அரும்பதத்தில் உள்ள ஒரு கருத்து: ஈச்வரன் நீங்கலாக ஓர் உபாயம் இல்லை என்றால், ஆசார்யன் மீது கொள்ளும் ஈடுபாடு என்பது "பஞ்சமோபாயம் என்பது இல்லை" என்றூ கூறும் இக்கருத்துடன் முரண்படாதோ என்று கேட்கலாம்; வ்யூஹ வாஸுதேவனுடன் அந்தர்பூதமாகச் செய்து மூன்று வ்யூஹங்கள் என்று கூறுவது போன்று, ஆசார்ய ஈடுபாடு தனியான ஓர் உபாயம் என்றபோதிலும், அதனை ஸித்தோபாயமான ஸர்வேச்வர அந்தர்பூதம் என்று கொண்டு, ஐந்தாம் உபாயம் என்று கூறப்பட்டது. பஞ்சமோபாயம் என்பது இல்லை" என்றூ கூறும் கருத்துடன் முரண்படாதோ என்று கேட்கலாம்; வ்யூஹவாஸுதேவனுடன் அந்தர்பூதமாக செய்து மூன்று வ்யூஹங்கள் என்று கூறுவது போன்று, ஆசார்ய ஈடுபாடு தனியன ஓர் உபாயம் என்ற போதிலும்,

அதனை ஸித்தோபாயமான ஸர்வேச்வரனுக்குள் அடக்கம் என்பதாகக் கொண்டு, ஐந்தாம் உபாயம் என்று கூறப்பட்டது. “பஞ்சமோபாயம் இல்லை” என்று நஞ்சீயர் கூறுவதைக் கேட்ட நம்பிள்ளை, “ஆனால், ‘ஆவா’ என்று திருப்பாசுரத்தை அருளிச்செய்த ஆழ்வார், ‘எனக்குத் தனியாக ஓர் உபாயம் ஏற்படுத்த வேண்டும்’ என்று என்று அருளிச்செய்தார் அல்லவோ?”, என்று கேட்டார். இதற்கு நஞ்சீயர், “அதன் கருத்தை நீவிர் அறியவில்லை. அதன் பொருள் என்னவென்றால், ‘நீ உள்ளாய் என்றபோதிலும், நான் இவ்விதம் உன்னை இழந்து நிற்கிறேன்’ என்று வெறுத்துக் கூறுகிறார் அல்லாமல், வேறு ஓர் உபாயம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்கவில்லை”, என்றார். இவ்விதம் அவனை வெறுத்தவர்கள் உள்ளனரோ என்பதற்கு, “உள்ளனர்”, என்று கூறி, உதாரணமும் காண்பிக்கிறார்; மஹாபாரதத்தில் – ஸாஹம் கேச க்ரஹம் ப்ராப்தா த்வயி ஜீவத்யபி ப்ரபோ – நீ உள்ளபோதிலும், எனது தலைமுடியைப் பிடித்துச் சிலர் துன்பம் செய்யும்படியாக நான் ஆனேன். உனது இருப்பிற்கும் எனது துன்பத்திற்கும் என்ன சேர்த்தி உள்ளது! (ப்ரபோ) – நீ என்னைப் போன்று பெண்ணாக இருந்திருந்தால், இவ்விதம் நான் பொறுத்திருப்பேனோ? நீ துன்பத்தைப் போக்குபவனாக உள்ளபோதிலும் நான் துன்பம் அடைக்கிறேன்!”,என்பது காண்க.

**அவதாரிகை** - நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்தானொருவன், “எம்பெருமானே உபாயமாகில் ப்ரபத்தி கொண்டு இங்குச் செய்கிறது ஒன்றுங் கண்டிலேன்” என்ன; செவியைப் புதைத்து, “நாதமுநிகள் தொடங்கி இவ்வளவும் வர நம் ஆசார்யர்கள் பரம ரஹஸ்யமாக உபதேசித்து ஓராண் வழியாய்க் கொண்டு போந்த இத்தை, இதின் சீர்மையறியாத உனக்கு மஹாபாபியேன் இத்தை வெளியிடுவதே!” என்று திருமுடியிலே அடித்துக் கொண்டு திருப்பள்ளியறையிலே புக்கருளினார். திவ்யமங்கள விக்ரஹமும் விக்ரஹ குணங்களும் திவ்யாத்ம ஸ்வரூபமும் ஸ்வரூப குணங்களும் நித்யமுக்தர்க்கு ப்ராப்யமானாற்போலே, முமுக்ஷுவாய் ப்ரபந்நனான இவ்வதிகாரிக்கு த்வய சரீரமே ப்ராப்யமாயிருக்குமிதே.

**விளக்கம்** – நான்காவது உபாயம் ஸர்வேச்வரன் ஆவான் என்று கூறினார்; இவ்விதம் கொண்டால், ப்ரபத்தியால் எந்த ஒரு விளைவும் இல்லையோ என்ற ஐயத்தை விலக்குகிறார்; நஞ்சீயருடைய திருவடிகளை அண்டி நின்ற ஒருவர், “ஸர்வேச்வரனே உபாயம் என்றால், ப்ரபத்தி மூலமாக இங்கு நிகழ்வது எதனையும்

நான் காண இயலவில்லையே!", என்றார். இதனைக் கேட்டவுடன் நஞ்சீயர் தனது காதுகளை மூடிக் கொண்டு, "நாதமுனிகள் தொடக்கமாக இந்த நாள் முடிய நம்முடைய ஆசார்யர்கள் மிகவும் இரகசியமாக உபதேசம் செய்து, ஓராண் வழியாகக் கொண்டு வந்த இந்த ப்ரபத்தியின் சீர்மையை அறியாத உனக்கு, மிகவும் பாபம் செய்த நான் வெளியிட்டேனே!", என்று தனது தலையில் அடித்துக்கொண்டு, பெருமாள் அறையில் புகுந்து கொண்டார். ஆயினும் அந்த ஒருவர் கேட்டதற்குப் பரிகாரம் என்ன என்பதைக் கூறுகிறார்; திவ்யமங்கள விக்ரஹமும், விக்ரஹ குணங்களும், திவ்யாத்ம ஸ்வரூப குணங்களும் நித்யமுக்தர்களுக்குக் கிட்டியபடியே உள்ளன; முமுக்ஷுவான ப்ரபந்நன் ஒருவனுக்கு ப்ரபத்தியே அடையவேண்டிய இலக்காக இருக்கும் அல்லவோ? "திருப்பள்ளி அறை" என்பது பெருமாள் அறை ஆகும்; அங்கு சென்றது, அந்த ஒருவருக்கு நல்ல புத்தியைத் தரவேண்டும் என்று ப்ரார்த்திப்பதற்காகவே ஆகும் எனலாம். அல்லது, துக்கம் கொண்ட ஒருவன், தனது நெருக்கமான உறவினரிடம் அல்லவோ செல்வார் என்றும் கூறலாம்.

**வ்யாக்யானம் -** (ஆவா என்னாது) ஈச்வரனுக்கு ப்ரியஞ் செய்கையாகிறது - அவன் விபூதியிலே க்ருபை பண்ணுகையிறே. நஞ்சீயர் "ஒருவனுக்குப் பரார்த்தம் அஸஹ்யமாயிருந்ததாகில், 'நமக்கு பகவத் ஸம்பந்தமுண்டு' என்று அறுதியிடலாம்; 'அது ப்ராப்தம்' என்று இருந்தானாகில், 'நமக்கு பகவத் ஸம்பந்தமில்லை' என்று தனக்கே கைவாங்கவமையும்" என்றருளிச் செய்தார். பிறராகிறார் ஆரென்னில், ஸ்வவ்யதிரிக்தர். "ஆனால் ப்ரதிகூலர் பக்கலிலும் க்ருபையைப் பண்ணவோ?" என்னில்; அப்படியேயன்றோ இவர்களுக்கு மதம். "துர்வாஸனை கழிந்து அநுகூலராகப் பெற்றிலோம்" என்று இருக்கவன்றோ அடுப்பது. அவன் "யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்றால், அவன் விபூதியிலுள்ள இவனுக்கு இத்தனையும் வேண்டாவோ? ஆனால், "நண்ணாவசுரர் நலிவெய்த" என்கிறவிடத்தில் அது எங்ஙனே ஸங்கதமாகிறபடி யென்னில்; அதுக்கென்? நண்ணாமை நிலைநின்றவன்று வத்யனாகிறான். அக்நீஷோமீய ஹிம்ஸையோபதி அதுதானே ஹிதமாகக் கடவதிறே. இவனுடைய தண்ணிய சரீரத்தைப் போக்கி நல்வழியே போக்குகிறானிறே.

**விளக்கம் -** (ஆவா என்னாது) - ஈச்வரனிடம் ப்ரியம் காண்பித்தல் என்பது, அவன் தனது விபூதியில் க்ருபை செய்தலே ஆகும் அல்லவோ? ஸர்வேச்வரனிடம்

ப்ரீதிக்காக மட்டுமே அல்லாமல், பகவத் ஸம்பந்தம் ஏற்படும்போது "ஆ ஆ" என்பதாகவே இருத்தல் வேண்டும் என்பதை ஒரு உரையாடல் மூலம் நஞ்சீயர் கூறுகிறார்; "ஒருவனுக்கு மற்றவர்களுடைய துக்கத்தைக் காணும்போது பொறுத்துக் கொள்ள இயலாத தன்மை ஏற்பட்டால், அவன் 'நமக்கு பகவத் ஸம்பந்தம் உண்டு' என்று தீர்மானிக்கலாம்; ஆனால், 'அவனுடைய இந்தத் துக்கமானது அவ்விதம் அனுபவிப்பவன் அடையவேண்டியதாகும்' என்று எண்ணும் தன்மை வந்தால், 'நமக்கு பகவத் ஸம்பந்தம் இல்லை' என்று முடிவு செய்யலாம்" என்று அருளிச்செய்தார். இங்குள்ள "மற்றவர்கள்" என்பது யார் என்றால், தன்னைக் காட்டிலும் வேறுபட்ட மற்றொருவர் ஆவர். ஆனால் நமக்கு விரோதமாக உள்ளவர்களிடம் க்ருபை செய்யலாமோ என்றால், அவ்விதம் இருத்தல் அல்லவோ இவர்கள் பண்பாக உள்ளது! அவ்விதம் க்ருபை செய்தாலும், ஒருவனிடம் விரோதம் தங்கியிருக்கும் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இப்படிப்பட்டவர்களைக் குறித்து, "இவனுக்கு உள்ள கெட்ட சிந்தனை விலகி நம்முடன் நட்பாக இருக்கப் பெறவில்லையே" என்று எண்ணுவதே சிறந்தது ஆகும். ஆனால் நமக்கு விரோதியாக உள்ளவனுக்கும் நன்மை உண்டாகவேண்டும் என்று எண்ணுவதற்குக் காரணம் என்ன என்று கூறுகிறார்; அதாவது யுத்தகாண்டம் (18-35) – யதிவா ராவணஸ் ஸ்வயம் - வருபவன் இராவணனே என்றாலும் - என்று இராமன் கூறினான்; அதாவது அவனுடைய விபூதியில் உள்ள ஒருவனுக்கு இவ்விதம் நல்லது நடக்கவேண்டாமோ? அப்படியானால் திருவாய்மொழி (10-7-5) – நண்ணா அசுரர் நலிவு எய்த - என்பது எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம்; இதற்கு விடை தருகிறார்; அப்படிப்பட்ட நண்ணாமை என்பது நிலை நின்றபோது, அப்படிப்பட்டவன் இவனால் கொல்லத்தக்கவன் என்றாகிறான் என்று கருத்து. ஆயினும், இவ்விதம் நண்ணாமை என்பது நிலைநின்றாலும், அவனை ஹிம்சித்தல் என்பது கைவிடத்தக்கது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார். அக்னீஷோமீயம் போன்றவற்றில் செய்யப்படும் ஹிம்ஸையானது அந்தப் பசுவிற்கு நன்மை உண்டாக்குவது போன்று, இவனுக்கும் இவனுடைய தாழ்ந்த சரீரத்தை நீக்கிக் கொடுத்து நன்மை செய்கிறான் என்று கருத்து.

**வ்யாக்யானம் -** (ஆவா என்னாது) "ஐயோ, ஐயோ" என்ன வேண்டியிருக்க, அதுக்கு மேலே நலியா நிற்பார்கள். ஒருவனோடே சாத்ரவம் பண்ணினானாகில், "அர்த்த

காம நிமித்தமாகவிறே இது வந்தது, இருவரும் சபலர்" என்றிறேயிருக்கலாவது; அங்ஙனன்றிக்கே, உலகத்தை அலைப்பர்களாயிற்று. தன்னோடொக்க உண்டு உடுத்துத் திரிகிற இதுவே ஹேதுவாக நலியா நிற்பர்களாயிற்று. (அசுரர்) அதுக்கு அடி அவர்கள் ஆஸுர ப்ரக்ருதிகளாகையாலே. (வாணாள் மேல்) இவர்கள் வீரக்கோலத்தால் வந்த ஒப்பனை குறியழியாதேயிருக்க, உயிரிலே நலிகை. அதாவது, இவர்கள் ஜீவந ஹேதுவான காலத்தை நலிகை. (தீவாய் வாளி) பெருமாள் தொடுத்து விடும் போதாயிற்று அம்பு என்றறியலாவது; படும்போது நெருப்புப் பட்டாற் போலேயிருக்கை. ஸ்ரீசார்ங்கத்தில் நாணியைக் கழிந்தபோதே, காலாக்கி கவடு விட்டாற்போலே எரிந்து கொண்டு செல்லாநிற்கும். குணஹீநமானாலிருக்கும்படியிறே இது. (தீப்தபாவக ஸங்காசை:) படும் போதிருக்கும்படி. (சிதை:) பட்டமை தெரியாதே தொளையுருவி அவ்வருகே விழக்காணுமித்தனை. (காஞ்சநபூஷணை:) இவற்றுக்கு ஆகார த்வயமுண்டா யிருக்கிறபடி. "சரங்களாண்ட தண்டாமரைக்கண்ணனுக்கன்றி தாழ்ந்து நில்லாது" என்கிறபடியே அநுகூலர்க்கு அகப்படுகைக்கும் அதுதானேயாயிருக்கிறபடி. (நத்வாமிச்சாமி:) இத்யாதி. இவ்வழகுக்கு இலக்காய் வாழ்ந்து போகலாயிருக்க, எதிரிட்டு முடிந்து போக நான் இச்சிக்கிறிலேன். நீ எண்ணியிருக்கிறது நான் அறிகின்றிலேனிறே. இருத்திப் பிடித்த வில்லும், தெரித்துப் பிடித்த பகழியுமாய்க் கொண்டு நிற்கும்போது அபிராமராயிறே யிருப்பது; அவ்வழகைக் கண்டு அநுபவிக்கமாட்டாதே, தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே தலைகீழதாக விழுந்து முடிவாரைப்போலே, "தயரதன் பெற்ற மரதக மணித்தடத்தை" எதிரிட்டு முடிந்து போக நான் காணமாட்டுகிறிலேன்.

**விளக்கம்** - (ஆவா என்னாது) - "ஐயோ ஐயோ" என்றுள்ளபோதிலும், மேலும் துன்புறுத்தியபடியே இருப்பார்கள். இங்கு "உலகத்தை" என்று ஏன் கூறினார்? ஒருவனை மட்டும் இவ்விதம் பகை கொண்டு துன்புறுத்தினால், "அந்த ஒருவனுடைய பொருளை விரும்பி எடுத்துக் கொண்டதால் அல்லவோ அந்த நிலை ஏற்பட்டது. இருவரும் சபலர்" என்று இருக்கவேண்டியதாகும். இவ்விதம் அல்லாமல் முழு உலகத்தையும் துன்புறுத்தியபடியே இருப்பார்கள். தங்களுடன் சேர்ந்து உண்டு, உடுத்து, திரிவதால் இதனையே காரணமாகக் கொண்டு துன்புறுத்துவர். (அசுரர்) - இதற்குக் காரணம், அவர்கள் அஸுரப்பிறவிகள் என்பதால் ஆகும். (வாணாள்) - அந்த அஸுரர்கள் பூண்டிருந்த வீரக்கோலத்தின் ஒப்பனை மாறாமல், அவர்கள் உயிரை எடுத்தல்; அதாவது அவர்கள் வாழ்வதற்குக் காரணமாக உள்ள காலத்தைத் துன்புறுத்தல் என்று கருத்து. வாணாள் என்றால்

ஆயுள். "வாணாள் மேல்" என்பதன் மூலம், அவர்களுடைய சரீரத்தின் உருவம் அழியாமல் இருப்பது கூறப்பட்டது; "காலத்தை" என்பது "ஆயுளை" என்று கருத்து. (தீவாய் வாளி) – ஸர்வேச்வரன் தொடுத்து விடும்போது அது அம்பு என்று மட்டுமே அறியப்படுவதாக உள்ளது; ஆனால், அது சென்று இலக்கின் மீது படும்போது, நெருப்பு பட்டது போன்று உள்ளது. ஸ்ரீசார்ங்கத்தின் நாணிலிருந்து விடுபட்டுச் செல்லும் அம்பானது காலாக்னி சுவடு விட்டபடி செல்வது போன்று எரிந்தபடி செல்லும். ஒருவனுக்கு நாணமும் குணமும் தாழ்ந்தால் இவ்விதம் அல்லவோ ஆகும்? இந்த இடத்தில் யுத்தகாண்டம் (16-22) – தீப்தபாவக ஸங்காசை: - என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். இது இராவணனை நோக்கி விபீஷணன் கூறுவது ஆகும். (தீப்தபாவக ஸங்காசை:) - அம்பானது மேலே படும்போது அக்னி பட்டது போன்று உள்ள நிலை. (சிதை:) - அப்போது ஏற்படும் கொடிமையின் எல்லையைக் கூறுகிறார்; அந்த அம்பு தைத்தது தெரியாதபடி துளை ஏற்படுத்தி, ஊடுருவிச் சென்று அப்புறம் விழக் காணலாம். (காஞ்சநபூஷணை:) - இந்த அம்புகளுக்கு இரண்டுவிதமான தன்மைகள் உள்ளன; அதாவது "சிதை" என்பதன் மூலம் ஆயுதமாக உள்ள தன்மையும், "காஞ்சன பூஷணை:" என்பதன் மூலம் இனிமையாக உள்ள தன்மையும் வெளிப்படுகிறது. ஆனால் யாருக்கு இனிமையாக இருக்கும் என்பதற்கு விடை கூறுகிறார்; பெரியதிருமொழி (7-3-4) – சரங்கள் ஆண்ட தண் தாமரைக்கண்ணனுக்கு அன்றி தாழ்ந்து நில்லாது - என்பதற்கு ஏற்ப, அவனிடம் ப்ரியமாக உள்ளவர்கள் அவனிடம் அகப்படுவதற்கு அந்த அம்புகளே காரணமாக உள்ளன. (நத்வாமிச்சாமி:) - இப்படிப்பட்ட அழகிற்கு இலக்காக இருந்து, வாழ்ந்து போகலாம் என்பதை விடுத்து, அதனை எதிர் கொண்டு, முடிந்து போக நான் விரும்பவில்லை. நீ எண்ணியுள்ளதை நான் நான் அறியமாட்டேன் அல்லவோ? அதாவது உனது நினைவுகள் எனக்குத் தெரியாது. நன்கு நிறுத்தி பிடிக்கப்பட்ட வில்லும், அதில் நன்கு தொடுக்கப்பட்ட அம்பும் என்பதாக அவன் நிற்கும்போது, அபிராமனாக அல்லவோ உள்ளான்? அந்த அழகைக் கண்டு அனுபவிக்காமல், தண்ணீர் குடிப்பதற்காகச் சென்ற ஏரியில் தலை கீழாக விழுந்து முடிபவர்கள் போன்று, திருவாய்மொழி (10-1-8) - தயரதன் பெற்றெடுத்த மரகதத் தடமணியை - எதிர்ந்து நின்று முடிந்து போவதை நான் காண விரும்பவில்லை.

**வ்யாக்யானம்** - (வாளி மழை பொழிந்த சிலையா) "சர வர்ஷம் வர்ஷஹ" என்கிறபடியே, பாட்டம்பாட்டமாக வர்ஷித்தபடி. (திருமாமகள் கேள்வா) விரோதிகளைப் போக்கினது கண்டு உகந்தணைக்குமவளைச் சொல்லுகிறது. (பர்த்தாரம் பரிஷஸ்வஜே) என்னுமவள் (தம் த்ருஷ்ட்வா) வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியான அழகையுடையவரை, எதிரிகளை வென்ற வீரக்கோலத்தோடே கண்டாள். (சத்ரு ஹந்தாரம்) தந்திருமேனியிலே ஒரு வாட்டம் வாராமே, அவர்களைக் குற்றுயிராக்கி விடுவதுஞ் செய்யாதே, துண்டித்து அடுக்கினவரை. முன்பு திருவயோத்யையிலிருந்த நாள், "இவர் வேட்டைக்குப் போனவிடத்தே இன்னபடியும் இன்னபடியும் பொருதார்; இன்ன புலியைக் குத்தினார், இன்ன ஸிம்ஹத்தைக் குத்தினார்" என்றாற்போலே பந்துக்கள் சொல்லக் கேட்குமத்தனையிறே; இங்குப் பூசலுக்குப் புகுகிறபோதே பிடித்து மேலுள்ள வ்யாபாரங்கள் அடங்கலுங் கண்டாள். (மஹர்ஷீணாம் ஸுகாவஹம்) ருஷிகளுடைய விரோதிகளைப் போக்கி, அவர்களுக்குக் குடியிருப்புப் பண்ணிக் கொடுத்தவரை. தங்கள் தபோ பலத்தாலே வெல்லலாயிருக்க, தங்கள் பரத்தைப் பெருமாள் தலையிலே பொகட்டு முறையுணர்ந்து கொண்டிருக்குமவர்களுக்கு. (கர்ப்பபூதாஸ் தபோதநா:) தந்தாம் கைம்முதலழிய மாறாதே யிருக்குமவர்கள். தபோதநராயிருக்கச் செய்தே கர்ப்பபூதரா யிருப்பர்கள். தந்தாமுக்கென்ன இயற்றியுண்டாயிருக்கச்செய்தே கர்ப்பாவஸ்த்தையில் ஐநநியறிந்து ரக்ஷிக்குமத்தனையிறே; அப்படியே அவனேயறிந்து ரக்ஷிக்க இருக்குமவர்கள். அநுகூல ரக்ஷணமும் ப்ரதிகூல நிரஸநமும் இவளுக்கு ப்ரியமாகச் செய்யுமவையிறே. (பபூவ) பதினாலாயிரம் முருட்டு ராக்ஷஸரோடே தனியே நின்று பொருகிற இத்தைக் கண்டு அஞ்சி, "இதென்னாய் விளையுமோ?" என்று ஸத்தையழிந்து கிடந்தாள், இப்போது உள்ளானாள். (பூ ஸத்தாயாம்). (ஹ்ருஷ்டா) ஸத்தையுண்டானால் உண்டாமதுவும் உண்டாயிற்று. (வைதேஹீ) உபாத்யாயர்கள் பெண்பிள்ளைகளுக்குச் செவியேற்றாலே ஒத்துப் போயிருக்குமாபோலே; வீர வாசியறியுங் குடியிலே பிறந்தவளிறே; ஒரு வில்லு முறித்த இதுக்கு உகந்து என்னைக் கொடுத்த எங்கள் ஐயர், பதினாலாயிரம் பேரைத் தனியே நின்று முடித்த இத்தைக் கண்டால் என்படுகிறார்தான்! (பர்த்தாரம்) முன்பு, இவர் ஸுகுமாரராகையாலே "குழை சரக்கு" என்றும், "ஐயர் நம்மை இவர்க்கு நீர் வார்த்துக் கொடுக்கையாலே நாம் இவர்க்கு சேஷம்" என்றும் அணைத்தாளத்தனை; "ஆண் பிள்ளை" என்று அணைத்தது இப்போது; (பரிஷஸ்வஜே) ராவண ஸமராய், அவன் மதித்த வீரத்தையுடையராயிருப்பார் பதினாலாயிரம் பேரும் விட்ட அம்புகளடங்கலும் இவர் மேலே பட்டு,

கண்டவிடமெல்லாம் யுத்த வடுவாயிறே திருமேனி கிடக்கிறது; அவ்வோவிடங்கள் தோறும் திருமுலைத் தடத்தாலே வேது கொண்டாள்.

**விளக்கம் –** (வாளி மழை பொழிந்த சிலையா) - “மழை பொழிந்த” என்பதைக் கூறுகிறார்; யுத்தகாண்ட (94-18) - சர வர்ஷம் வர்ஷஹ - அம்பு மழை போன்று அம்புகளைப் பொழிந்தாந் என்பதற்கு ஏற்ப, பாட்டம்பாட்டமாக மழை போன்று அம்புகளைப் பொழிந்தான். (திருமாமகள் கெள்வா) - “வாளி மழைபொழிந்த சிலையா” என்றதன் கருத்தைக் கூறுகிறார். அவ்விதம் விரோதிகளை நீங்கியது கண்டு உகந்து அணைத்துக் கொள்ளும் மஹாலக்ஷ்மியைக் கூறுகிறார். அவ்விதம் அவள் அணைத்துக் கொண்டாளோ என்பதற்கு ப்ரமாணமும் வ்யாக்யானமும் காண்பிக்கிறார்; ஆரண்ய (30-39) - தம் த்ருஷ்ட்வா - என்று ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார்; (தம் த்ருஷ்ட்வா) - வெறும் புறத்தில் ஆலத்தி வழிக்கவேண்டும்படியான அழகு கொண்டவனை, இந்த யுத்தத்தில் எதிரிகளை வென்ற வீரத் திருக்கோலத்தில் கண்டாள். (சத்ரு ஹந்தாரம்) - தனது திருமேனியில் எந்த ஒரு வாட்டமும் ஏற்படாமல், விரோதிகளைக் குற்றுயிரும் கொலையுயிரும் என ஆக்காமல், துண்டித்து அடக்கியவனை. முன்பு இவன் திருஅயோத்தியில் இருந்துபோது, வேட்டைக்குச் சென்ற இடத்தில், “இவ்விதமாகவும் அவ்விதமாகவும் வேட்டையாடினான். இன்ன புலியைக் குத்தினான். இன்ன சிங்கத்தைக் குத்தினான்” என்பது போன்று உறவினர்கள் கூறியதை மட்டுமே காதுகளால் கேட்டாள்; ஆனால் இன்று அவ்விதம் ஒரு பூசலுக்குச் செல்லும்போது தொடங்கி, மேலே கூறப்பட்ட அனைத்து செயல்களையும் நேரில் கண்டாள். (மஹர்ஷீணாம் ஸுகாவஹம்) - ரிஷிகளுடைய விரோதிகளைப் போக்கி, அவர்களுடைய இருப்பிடத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்தவனை. தங்களுடைய தவ வலிமை மூலம் மட்டுமே அந்த ராக்ஷஸர்களை வெல்ல இயலும் என்றாலும், “ஈச்வரனே ரக்ஷகன், நாம் காப்பாற்றப்படும் வஸ்துக்கள்” என்ற ஞானம் உள்ளவர்கள் என்பதால், தங்களுடைய பாரத்தை இராமனுடைய தலையில் வைத்தவர்களாக, இப்படி சரணாகதி முறை உணர்ந்தவர்களாக உள்ளவர்களுக்கு. இவ்விதம் அவனிடம் தங்கள் பாரத்தை வைத்தவர்கள் உள்ளவனரா என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; ஆரண்யகாண்டம் (1-21) - கர்ப்பபூதாஸ் தபோதநா: - தங்கள் தங்கள் கைம்முதல் அப்படியே இருக்கும்படியாக உள்ளவர்கள். தவத்தில் சிறந்து விளங்கினாலும் தங்களுடைய கைம்முதலாக எம்பெருமானை மட்டுமே கொண்டுள்ளவர்கள். தங்கள் தங்கள் கர்ம பலன்களுக்கு

ஏற்ப ஜன்மம் எடுத்தபோதிலும், கர்ப்பத்தில் உள்ள நிலையில் தாயானவள் கர்ப்பத்தை அறிந்து காப்பாற்றுகிறாள் அல்லவோ? அது போன்றே அவனே அறிந்து கொண்டு காப்பாற்றவேண்டும் என்று உள்ளவர்கள். இவ்விதம் அவன் காப்பாற்றுதல் என்பது யாருடைய ப்ரியத்திற்காக என்பதற்கு விடை அளிக்கிறார்; அநுகூலமாக உள்ளவர்களைக் காப்பாற்றுதலும், விரோதமாக உள்ளவர்களை அழித்தலும் அவளுக்கு ப்ரியமாக இருப்பதற்காக இவன் செய்பவை அல்லவோ? (பபூவ) - பதினான்காயிரம் முரட்டு ராக்ஷஸர்களுடன் இராமன் தனியே நின்று மோதியபோது, அச்சம் கொண்டவளாக, "இது எப்படி விளையுமோ?", என்று இருப்பு கொள்ளாமல் தடுமாறினாள்; ஆனால் இங்கு இராவண யுத்தத்தில் தனது இருப்பை மீண்டும் அடைந்தாள். (பூ ஸத்தாயாம்) என்பது காண்க. (ஹ்ருஷ்டா) - இருப்பு ஏற்பட்டவுடன் உண்டாகும் அனைத்தும் ஏற்பட்டது. (வைதேஹீ) - இவள், வீரத்தன்மையில் உள்ள வேறுபாட்டை அறிந்த்து எப்படி என்பதற்கு விடை அளிக்கிறார்; உபாத்யாயர்கள் வீட்டில் உள்ள பெண்பிள்ளைகளுக்கு அவரவர் தந்தைமார்கள் வேதம் ஓதும்போது, அவை செவிகளில் விழுந்து, பதிந்து நிற்கும் அல்லவோ? அதனைப் போன்று இவளும் வீரத்தின் வேறுபாட்டை அறிந்த குலத்தில் பிறந்தவள் அல்லவோ? "ஒரு வில்லை முறித்தது கண்டு மிக்க மகிழ்ச்சி கொண்ட எனது தந்தை என்னை இவருக்குத் தந்தார். இங்கு பதினான்காயிரம் ராக்ஷஸர்களைத் தனியே நின்று முடித்ததைக் கண்டால், என்ன நிலை ஆவாரோ?" என்று மகிழ்ந்தாள். (பர்த்தாரம்) – முன்பு, இராமன் மென்மையானவன் என்பதால், "காக்கப்படும் பொருள்" என்றும், "நம் தந்தை இவருக்கு நம்மை தாரை வார்த்துக் கொடுத்ததால் நாம் இவருக்கு வசப்பட்டவள்" என்றும் எண்ணினாள்; ஆனால் இப்போது "ஆண்பிள்ளை" என்று அணைத்துக் கொண்டாள். (பரிஷஸ்வஜே) - இவனை இப்போது அணைத்துக் கொண்டதன் காரணம் கூறுகிறார்; இராவணனுக்கு நிகராக உள்ளவர்களான, அவனால் மதிக்கப்பட்ட வீரம் கொண்டவர்களான பதினான்காயிரம் ராக்ஷஸர்கள் தொடுத்த அம்புகள் அனைத்தும் இவர் மீது பட்டு, திருமேனியில் பார்க்கும் இடம் அனைத்தும் யுத்த தழும்புகள் காணப்படுகின்றன; அந்தந்த இடங்களில் தனது ஸ்தனங்களால் தடவிக்கொடுத்தாள்.

**வ்யாக்யானம்** - (திருமாமகள் கேள்வா) உனக்கு சக்தி வைகல்யம் உண்டா யிழக்கிறேனோ? புருஷகாரமில்லாம லிழக்கிறேனோ? (தேவா) இவளணைத்த

பின்பு திருமேனியிற் பிறந்த புகர். அன்றியே விரோதிகளைப் போக்குகையாலே வடிவிலே பிறந்த காந்தியைச் சொல்லவுமாம். “நம்முடைய விரோதிகளைப் போக்கினவன் வர்த்திக்கிற தேசம்” என்று, தேவர்களும் ருஷிகளும் தங்களபிமதங் கிடைக்குமென்று ஆதரிக்கிற திருமலை. (சுரர்கள் இத்யாதி) அநுகூலர் அடையத் திரண்டு படுகாடு கிடக்கும் தேசம். (பூவார் கழல்கள்) பூவாலல்லது செல்லாத திருவடிகளென்னுதல். பூவோடொத்த திருவடிகள் என்னுதல்.

**விளக்கம்** - (திருமாமகள் கேள்வா) – “தீ வாய் வாளி மழை பொழிந்த சிலையா” என்பதன் மூலம், “உனது சக்தியில் குறைவு ஏற்பட்டு அதன் காரணமக உன்னை இழக்கிறானோ?” என்றும்; “திருமாமகள் கேள்வா” என்பதன் மூலம் “உன்னிடம் என்னைக் குறித்துப் பரிந்து பேச யாரும் இல்லாமல் உன்னை இழக்கிறேனோ?”, என்றும் கூறுகிறார். (தேவா) - இவள் அணைத்துக் கொண்ட பின்னர் திருமேனியில் தோன்றிய புகர். அல்லது விரோதிகளை அழித்ததால் திருமேனியில் தோன்றிய காந்தியைக் கூறுவதாகவும் கொள்ளலாம். “நம்முடைய விரோதிகளைப் போக்கியவன் எப்போதும் வாழும் இடம்” என்று தேவர்களும் ரிஷிகளும் தங்களுடைய விருப்பம் நிறைவேறும் என்பதாக ஆதரித்து நிற்கும் திருவேங்கடத் திருமலை. (சுரர்கள் இத்யாதி) - அநுகூலமாக உள்ளவர்கள், அவனை அடையும் பொருட்டு திரண்டு வந்து ஈடுபட்டு நிற்கும் இடம். (பூவார் கழல்கள்) - மலர்கள் மீது நடத்தல் என்பது அல்லாமல் கடினமான இடங்களில் நடப்பதற்கு ஏற்றபடி இல்லாத மென்மையான திருவடிகள். அல்லது “ஆர்தல்” என்பதற்கு “பொருந்துதல்” என்று பொருள் கொண்டு, “மலர்களுடன் எப்போதும் சேர்ந்துள்ள திருவடிகள்” என்றும் பொருள் கூறலாம்.

**வ்யாக்யானம்** - (அருவினையேன்) அவன் ப்ரதிபந்தகங்கள் போக்கவல்லனாயிருப்பது, எனக்கு ஆசை கரைபுரண்டிருப்பது, திருவடிகள் நிரதிசய போக்யமாயிருப்பது; இங்ஙனேயிருக்கச் செய்தே, கிட்டியநுபவிக்கப் பெறாத பாபத்தைப் பண்ணினேன். (பொருந்துமாறு புணராயே) அசோகவநிகையிலே இருந்த பிராட்டியோபாதிகாணும் தம்மை நினைத்திருக்கிறது; (புணராயே) உன்னைக் கிட்டும் வழி கல்பிக்க வேணுமென்னுதல், நான் கிட்டும்படி பண்ண வேணுமென்னுதல்.

**விளக்கம்** - (அருவினையேன்) - அவன் எனது தடைகள் அனைத்தையும் போக்கவல்லவனாக இருத்தல், எனக்கு அவன் மீது ஆசை கரை புரண்டு இருத்தல்,

அவனுடைய திருவடிகள் எல்லையற்ற இனிமையுடன் கூடியிருத்தல் என இப்படியாக உள்ளபோதிலும், அவனையும் அவன் திருவடிகளையும் கிட்டி அனுபவிக்க இயலாத பாபங்களையும் நான் செய்தேன். (பொருந்தும் ஆறு புணராயே) - அசோக வனத்திலிருந்த ஸீதையைப் போன்று தன்னை எண்ணிக்கொள்கிறார்; அதாவது முன்பு கூடியிருந்து, தற்போது பிரிந்துள்ள நிலை. (புணராயே) - உன்னை அடையும் வழியை நீயே எனக்குக் கற்பிக்கவேண்டும். நான் உன்னை அடையும்படிச் செய்தருள வேண்டும்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

# பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 11)

1-2-5. பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்து உண்டிட்டு
உறங்குவான் போலே கிடந்த இப் பிள்ளை
மறம் கொள் இரணியன் மார்வை முன் கீண்டான்
குறங்குகளை வந்து காணீரே குவி முலையீர் வந்து காணீரே

**பொருள் -** முன்பு ஒரு நாள் ப்ரஹ்லாதன் மீது சினம் கொண்ட இரணியனுடைய மார்பைப் பிளந்த நரசிங்கத்தின் தொடைகள் இது என்று தோற்றும் வண்ணம், கொடுமையான கொலை உணர்வு ஓங்க வந்த ப்ரகாசத்தையுடைய பூதனையின் முலையைப் பசி ஆரச் சுவைத்து உண்டு ஏதும் அறியாதவன் உறங்குவது போன்று கிடக்கும் இப்பிள்ளையின் தொடைகள் உள்ளன. இதனை வந்து காணுங்கள்! குவிந்த முலைகளை உடைய பெண்களே நீங்கள் வந்து காணுங்கள்!

**திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை -** திருமுழந்தாளை விட்டு திருத்துடையை அநுபவிக்கிறார்.

**திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் -** (பிறங்கியவித்யாதி) விபரீத ப்ரகாசகையான பேய்ச்சியுடைய முலையைச் சுவைத்து, (உண்டிட்டு) ஆஸ்வாதித்து, அமுது செய்திட்டு. (இட்டு) ஜகத்துக்கு உபகரித்திட்டு. (உறங்குவான் போலே) கண்வளருவாரைப்போலே ஆடப் பார்த்துக் கிடந்த ப்ரகாரத்தைக் கண்டு "இப்பிள்ளை" என்கிறாள். (மறங்கொளித்யாதி) பிள்ளையைச் சீறி வெகுண்ட மறத்தாலேயிறே ஹிரண்யனைப் பிளந்தது. இப்படி பிளந்தவனுடைய திருத்துடைகளை ரக்த ஸ்பர்சத்தோடே காணீர் என்றாப்போலே

இருக்கிறது. இப்போது இது சொல்லுகிறது விரோதி நிரஸந ஸாமர்த்தியத்தாலும், தர்ம்மைக்யத்தாலுமிறே; அன்றிக்கே ஸ்வாபாவிகமாகத் தழுவுகிற போதைத்திருக்குறங்குகளை வந்து காணீரென்கிறாரென்றுமாம். "குவி முலையீர்" என்று பக்தி வர்த்தகராகிறவர்களை அழைக்கிறார்.

**மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை -** திருமுழந்தாளினழகை அநுபவித்த வநந்தரம், திருத்துடையினழகை யநுபவிக்கிறார்.

**விளக்கம் –** திருமுழங்காலின் அழகை அனுபவித்த பின்னர் திருத்தொடையின் அழகினை அனுபவிக்கிறாள்.

**மாமுனிகள் வ்யாக்யானம் -** (பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு) க்ரௌர்யத்தால் வந்த ப்ரகாசத்தை யுடையளான பூதனையுடைய முலையைப் பசையறச் சுவைத்து புஜித்து. "உண்டிட்டு" என்று ஒரு முழுச் சொல்லு. (உறங்குவான் போலே கிடந்தவிப்பிள்ளை) செய்த பராக்ரமம் ஒன்றும் தெரியாதபடி உறங்குமவன் போலக் கிடந்த இப்பிள்ளை. (மறங்கொளிரணியனை) ப்ரஹ்லாத விஷயமான சீற்றத்தையுடையனான ஹிரண்யனுடைய மார்வை முற்காலத்திலே பிளந்து பொகட்டவனுடைய அச்சுவடு தோற்றும்படியிருக்கிற திருத்துடைகளை வந்து காணுங்கோள். (குவி முலையீர் வந்து காணீரே) குவிகிற முலையையுடைய நீங்கள் வந்து காணுங்கோள்.

**விளக்கம் –** (பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்து உண்டிட்டு) – "பிறங்குதல்" என்றால் ப்ரகாசம்; இங்கு, பூதனைக்கு எவ்வாறு ப்ரகாசம் உண்டாகிறது என்னும் ஐயத்திற்கு விடை அருளிச்செய்கிறார். க்ருஷ்ணனைக் கொல்ல வேண்டும் என்னும் விபரீதமான எண்ணத்தால் விளைந்த ப்ரகாசம். எவ்வாறு விபரீதமான எண்ணம் ப்ரகாசத்தை உண்டு பண்ண முடியும்? க்ருஷ்ணனைக் கொல்ல யசோதையைப் போன்று வருவதால், அந்தத் தாயுடைய பாவனையால் ப்ரகாசம் உண்டாகிறது; இப்படி ப்ரகாசத்துடன் உள்ள பூதனையுடைய முலையை, பெரியாழ்வார் திருமொழி (1-2-3) – பால் பாய்ந்து கொங்கை அணைத்து - என்று பசியார சுவைத்து உண்டு. (இட்டு) – பூதனைக்கும், இந்த உலகத்திற்கும் பெரிய உதவி செய்திட்டு. (உறங்குவான் போலே கிடந்த இப்பிள்ளை) - பூதனையை அழித்த இடத்தில், குருதியை வற்றப் பண்ணுவதும், மாமிசங்களை ஒழிப்பதும், எலும்புகளை முரிப்பதும் போன்ற எவ்விதமான கடினமான காரியங்களைச்

செய்யாமல், “என்ன செய்து இவள் அழிந்தாள்” என்று யாவரும் வியக்கும் வண்ணம் எளிதாய்த் தீர்த்து முடித்து, உறங்குவது போன்று கிடந்த இப்பிள்ளை. (மறங்கொள் இத்யாதி) - பகவத் விஷயமான கோபமாகவே இருந்தாலும் பாகவதர்கள் மேல் உள்ள கோபமாகக் கொண்டு அருளிச் செய்கிறார். தன் பிள்ளையான ப்ரஹ்லாதன் மீது சினத்துடன் இருந்த இரணியனுடைய மார்பை முற்காலத்திலே பிளந்த நரசிம்மத்தின் தொடைகள் போன்றுள்ள, இவனுடைய சிவந்த தொடைகளை வந்து காணுங்கள். இங்கு நரசிம்மத்தைக் குறித்து ஏன் கூறவேண்டும்? இவனுடைய விரோதிகளை அழிக்கும் சாமர்த்தியத்தைக் கூறுவதற்கும், அடியார்களைக் காக்கும் தர்மத்தை உரைப்பதற்கும் ஆகும். (குவிமுலையீர் வந்து காணீரே) - என் பிள்ளை மீது மிகுந்த அன்பு ததும்புவதைத் தோற்றுவிக்கும் குவிந்த முலைகளை உடையவர்களே! நீங்கள் வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்